முற்பகல் 10-05

(2) இரங்கல் தீர்மானம்.

முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர் திரு. எம். இதயத்துல்லா மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கின்றேன் :

''திரு. எம். இதயத்துல்லா, முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் 18—9—1992 அன்று மறைவுற்ற செய்தி கேட்டு இப்பேரவை மிகவும் வருந்துகிறது.

மறைந்த திரு. எம். இதயத்துல்லா அவர்கள் 31—8—1979 முதல் 30—8—1984 வரை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராக விளங்கினார். மேலும் அவர் 1969 மற்றும் 1982-இல் தற்காலிகக் குடியரசுத் தலைவராகவும் விளங்கினார். அவர் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக 1968 முதல் 1970 வரை பணியாற்றியுள்ளார். இந்தியத் திருநாட்டின் தலைசிறந்த குடிமகனாகவும், நல்லறிஞராகவும் திகழ்ந்த அவரது இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும். அன்னாரது மறைவு குறித்து இப்பேரவை தனது பெரும் துயரினையும், அன்னாரது குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.''

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், இயற்கை எய்திய பெரியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து இரண்டு மணித் துளிகள் மவுனமாக நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.

(3) வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 1, திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.